## லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகள் மற்றும் உபாயக் கற்கைகள் நிறுவகம் - 2015

லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகள் மற்றும் உபாயக் கற்கைகள் நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 32 ஆம் இலக்க உபாயக் கற்கைகள் தொடர்பான இலங்கை நிறுவக அதிகாரச்சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000 இன் 45 ஆம் இலக்க உபாய கற்கைகள் தொடர்பான இலங்கை நிறுவக அதிகாரச்சட்டத்தின் 10(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகள் மற்றும் உபாயக் கற்கைகள் நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிலையத்தின் நிதிக்கூற்றுக்களில் பாடநெறிக் கட்டணங்கள் அட்டுறு அடிப்படையின் பேரில் கணக்கீடு செய்யப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பாடநெறிக் கட்டண வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) வருடாந்தம் திறைசேரியிடமிருந்து மூலதனச் செலவினத்திற்காக வழங்கப்படும் மானியங்களை மீண்டெழும் மானியமாக நிதிச் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கும் கொள்கை தொடர்ந்தும் பின்பற்றப்பட்டிருந்தது. அதனால் மூலதன மானியங்களைப் பயன்படுத்தி கையேற்கப்பட்டிருந்த ரூபா 904,772 ஆன நடைமுறையல்லாச் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் நிரூபணமாகாமல் இருந்ததுடன், அதன் பேரில் பெறுமானத்தேய்விற்காக கணக்கீடு செய்யப்படாதிருந்தமை, ரூபா 3,191,793 ஆன மூலதன மானியங்களை மீண்டெழும் செலவினத்தை மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை மற்றும் உபயோகிக்கப்படாத ரூபா 2,694,865 ஐ ஆண்டின் இலாபத்திற்கு உள்ளடக்கப்பட்டமை போன்ற கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

நிறுவகத்தின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக மீளாய்வாண்டினுள் காசாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு மற்றும் அட்டுறு செலவினம் என்பவற்றின் கூட்டுத்தொகை ரூபா 445,147 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 487,069 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமை காரணமாக ரூபா 41,992 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 ஆம் ஆண்டில் அட்டுறு உபசரிப்புச் செலவினம் ரூபா 62,000 தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 177(1) | சேகரிக்கப்படுகின்ற பணம் நாள்தோறும் அல்லது முடியுமான வரை வங்கியிலிடப்பட வேண்டிய போதிலும், பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிலையத்தின் பாடநெறிக் கட்டண வருமானத்தை வங்கியிலிடும் போது 03 நாட்கள் முதல் 50 நாட்கள் வரையான காலப்பகுதியிலான தாமதம் அவதானிக்கப்பட்டது. |
| (ii) நிதிப்பிரமாணம் 341(1) | பயன்படுத்தப்படுகின்ற அடியிதழ் புத்தகங்கள் பெறுவனவு மற்றும் அது தொடர்பாக பதிவு செய்வதற்காக நிறுவகத்தினால் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | முற்பணம் வழங்கப்பட்ட செயற்பாடு நிறைவுபெற்றவுடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிலையத்தின் பாடநெறி இணைப்பாளருக்கு 03 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 380,000 தொகையான முற்பணங்களை தீர்க்கும் போது பெற்றுக்கொண்ட தொகையில் 60 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையான வீச்சொன்று 06 நாட்கள் முதல் 24 நாட்கள் வரையில் கையில் வைத்திருந்ததன் பின் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிறுவகம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவத்தின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 13,410,412 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br>9.3.1 ஆம் பந்தி | நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு உரிய அமைச்சினதும் திறைசேரியினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 8,490,821 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,339,517 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,151,304 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏனைய வருமானம் ரூபா 4,694,690 ஆல் குறைவடைந்தமை, வழங்கல் மற்றும் நுகர்வுச் செலவினம் ரூபா 2,788,831 ஆல் அதிகரிப்பொன்று இடம்பெற்றிருந்த போதிலும், பதவியணியினர் செலவினம் ரூபா 2,346,923 ஆலும் ஏனைய செலவினம் ரூபா 5,013,781 ஆலும் குறைவடைந்தமை மற்றும் பாடநெறிக் கட்டண வருமானம் ரூபா 5,018,871 ஆல் அதிகரித்தமை மிகையின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டின் போது நிதி பற்றாக்குறையொன்று பெற்றிருந்த போதிலும், அதன் பின்னரான ஆண்டுகளில் தொடர்ச்சியான நிதி மிகையொன்று பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 3,308,884 ஆன நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 16,640,237 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) 2006 இன் 32 ஆம் இலக்க உபாயக் கற்கைகள் தொடர்பான இலங்கை நிறுவக (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்தன.

- அரச பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, சட்டம், பொருளியல், கலாசார தொடர்புகள், விவசாயம் மற்றும் சுற்றாடலுக்குரிய தகவல்கள் உட்பட சர்வதேச தொடர்புகள் மற்றும் உபாய கற்கைகளுக்குரிய தேசிய கொள்கைகளை தயாரித்தல் கட்டமைப்பதற்காக தகவல் மற்றும் தரவுகளை அரசிற்கு வழங்குதல்.

- உபாய வழிக் கற்கைகள் மற்றும் சர்வதேச தொடர்புகளை மேம்படுத்தும் ஆராய்ச்சிகளுக்கும் கற்கைகளுக்கும் மானியங்களை வழங்கல் மற்றும் அதனை பொறுப்பேற்கும் நபர்களுக்கு பயிற்சியளித்தல்.

- இலங்கைக்கு பொருத்தமான உபாய கற்கைகள் மற்றும் சர்வதேச தொடர்புகள் தொடர்பாக கலந்துரையாடல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடுவதற்காக பின்புலமொன்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக வலயத்திலும் சர்வதேச ரீதியிலும் ஒன்றிணைந்த ஆய்வுகள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல்.

- உபாய வழிக் கற்கைகள் மற்றும் சர்வதேச தொடர்புகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள நூலகமொன்று உட்பட தகவல்கள் களஞ்சியமொன்றை உருவாக்குதல்.

- விடயப்பரப்பிற்கு எடுக்கும் விடயங்களுக்குரிய பருவ சஞ்சிகைகள் மற்றும் கடிதங்களை வெளியிடல்.

- இலங்கை உட்பட ஏனைய நாடுகளிலும் சமமான நோக்கங்களுடன் கூடிய நபர்கள், அமைப்புக்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்புகள் மற்றும் நட்பினை பேணிச்செல்லல்.

- இராஜதந்திர நடவடிக்கைகளுக்காக சர்வதேச தொடர்புகள் மற்றும் நிறுவகத்தினால் பொருத்தமானதென கருதப்படும் ஏனைய உரிய துறை தொடர்பாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிறுவகத்தினால் மீளாய்வாண்டின் போது தந்திரோபாய கற்கைகள் மற்றும் சர்வதேச தொடர்புகள் தொடர்பான 05 விரிவுரைகள் மற்றும் 07 கலந்துரையாடல்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அதன் மூலம் மேற்குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக போதியளவு பங்களிப்பொன்று அளிக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) அதிகாரச்சட்டத்தின் 10(உ) பிரிவின் பிரகாரம் பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவத்தின் இலக்கொன்றாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய கல்விப் பாடநெறிகள் நடாத்துவதற்குப் பொறுப்பாக லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தின் பிரிவொன்றாக செயற்படுத்த வேண்டியதுடன் அவ்வாறு செயற்படுத்துகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய கற்கை பாடநெறிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மெற்கொள்ளப்படுகின்றன.

(i) கற்கை நடைமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இராஜதந்திர மற்றும் சர்வதேச தொடர்புகள் தொடர்பான டிப்ளோமாவைப் பின்பற்றுவதற்கு பட்டதாரிகள், தொழில்துறையினர், அரசினதும் தனியார் துறையினதும் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிநாட்டு சேவையில் இணைவதற்கு எதிர்பார்த்துள்ளவர்கள் மாத்திரமாக இருந்த போதிலும், க.பொ.த. (உ/த) சித்தியடைந்த 22 மாணவர்களும், க.பொ.த. (சா/த) சித்தியடைந்த ஒரு மாணவரும் மீளாய்வாண்டின் போது டிப்ளோமா பாடநெறிக்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ii) 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இராஜதந்திர மற்றும் சர்வதேச தொடர்புகள் தொடர்பான டிப்ளோமா, மாலைதீவு தூதுவராலயத்தின் 04 உத்தியோகத்தர்களுக்கும் அமைச்சின் 07 உத்தியோகத்தர்களுக்கும் இராஜதந்திர மற்றும் சர்வதேச தொடர்புகள் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமாவிற்காக அமைச்சின் 03 உத்தியோகத்தர்களுக்கும் கட்டணக் கொடுப்பனவின்றி பின்பற்றுவதற்காக பதில் பணிப்பாளரால் அனுமதி அளிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) நிறுவகத்தினால் இராஜதந்திர மற்றும் சர்வதேச தொடர்புகள் தொடர்பான சான்றிதழ் பாடநெறி 2013 ஆம் ஆண்டின் பின்னர் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 05 மாதங்கள் தாமதித்து 2016 ஆகஸ்ட் மாதம் 01 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5:1:2 ஆம் பிரிவின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்தமையால் அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வது தொடர்பாக செயலாற்றலுடன் ஒப்பிடுவதற்கு முடியாமல் இருந்தது.

### 5.3 கொள்வனவுத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் (ஈ) பிரகாரம் நிறுவகத்தினால் மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் முதல் அரையாண்டிற்காக சுகாதார சேவைகள் மற்றும் பூங்கா பராமரிப்பு போன்ற இரண்டு செயற்பாடுகள் தொடர்பாக வழங்கல் உடன்படிக்கைகளுக்கு உட்படாமல் ரூபா 1,260,000 ஆன பணம் செலுத்தப்பட்டிருந்தது.

### 5.4 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 133 இன் பிரகாரம் நிறுவகத்தினுள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன், அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினாலும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக நிறுவகத்தின் உச்ச இலக்கை அடைந்து கொள்வதற்கான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்துவதற்கு பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.6 ஆண்டறிக்கையை சமர்ர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான பலவீனங்கள் அவ்வப்போது நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) நூலகங்களின் நிர்வாகம் | (i) பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவத்தின் பயன்பாட்டு பதிவேட்டின் இலக்கம் புத்தகங்களில் குறிப்பிடப்படாமை<br>(ii) லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தில் பயன்பாட்டுப் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பாடநெறிகளுக்காக மாணவர்களைச் சேர்த்தல் | இராஜதந்திர மற்றும் சர்வதேச தொடர்புகள் தொடர்பான பாடநெறிகளுக்காக முறையாக பூர்த்தி செய்யப்படாத குறைபாடுகளுடன் கூடியதாக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை நிராகரித்தல் அல்லது குறைபாடுகளை பூர்த்தி செய்யாமல் மாணவர்களுக்கு பாடநெறிகளை பின்பற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கியிருந்தமை. |
| (இ) நிலையான சொத்துகள் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் பதிவேடு பராமரிக்கப்படாமை. |
| (ஈ) செலவினக் கட்டுப்பாடு | பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவத்தினால் மேலதிக நேரக் கொடுப்பனவின் போது நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் குறிப்பிடப்படாதிருந்தமை மற்றும் முற்பணங்களை செலுத்தும்போது முற்பணப் பதிவேடொன்று பராமரிக்கப்படாமை. |